**ஹிக்கடுவ நகர சபை**
**காலி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2016 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2016 ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 நவம்பர் 14 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்ந்து, ஹிக்கடுவை நகர சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினை அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

முன்னைய ஆண்டிற்கான முத்திரை கட்டணத்திற்காக குறைவாக ஏற்பாடு செய்திருந்த ரூபா 174,167 தொகை தொடர்பாக கணக்கீடு செய்திருக்கவில்லை.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 77,430,336 தொகைக்கான 11 கணக்கு விடயங்கள் தொடர்பாக துணைப் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளில் காணப்படும் மீதிகளிடையே வித்தியாசங்கள் காணப்பட்டதுடன், அவதானிக்கப்பட்ட சமமின்மைகளின் கூட்டுத்தொகை ரூபா 29,773,805 ஆக இருந்தது.

#### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 ஆண்டு முதல் நிதிக் கூற்றுகளில் மாற்றமின்றி முன் கொண்டு வரப்படும் கூட்டுத்தொகை ரூபா 160,795 தொகைக்கான சபையின் முற்கொடுப்பனவு மற்றும் முற்பணக் கணக்கின் மீதியை தீர்ப்பதற்காக மீளாய்வண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2014 ஆண்டின் போது நாரிகம பதன பாதையின் பாலத்தை நிர்மாணிக்கும் வேலை தொடர்பாக கிடைக்க வேண்டிய ரூபா 789,164 இற்கான தொகையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) சபையின் வடிகால் முறைமையை நிர்மாணிப்பதற்காக 2004 ஆண்டின் போது உள்நாட்டுக் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெற்றிருந்த ரூபா 15,576,729 தொகையாக கடன் தொகையினை தீர்ப்பதற்காக முறையான நடைமுறையொன்று தயாரித்து, செயற்படுத்தி இருக்கவில்லை.

(ஈ) 2008 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரை சபையின் 04 நிர்மாண வேலைகள் தொடர்பாக செலுத்த வேண்டிய ரூபா 2,061,259 இற்கான கடன் தொகையினை தீர்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 98,116,648 தொகைக்கான நிலையான சொத்துக்கள் தொடர்பாக நாளதுவரை ஆக்கப்பட்ட சொத்ததுக்களின் வகுப்புக்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் முறையான அட்டவணைகளும், ரூபா 4,341,718 தொகைக்கான நிலையான வைப்புக்களுக்கான நிலையான வைப்புப் பதிவேடும், ரூபா 12,730,877 தொகைக்கான வங்கியில் பணத்திற்கான மீதியை உறுதிப்படுத்தும் கடிதமும் ரூபா 11,093,588 தொகைக்கான திருப்பி செலுத்த வேண்டிய வைப்புகள் தொடர்பாக நாளதுவரை ஆக்கப்பட்ட வைப்புகள் பதிவேடு மற்றும் அட்டவணையும், ரூபா 16,981,982 தொகைக்கான உள்நாட்டுக் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கான நாளதுவரை ஆக்கப்பட்ட கடன் பதிவேடும், சமர்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

**1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

கீழே விபரிக்கப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம் 570 மற்றும் 571(1)(2) | 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 02 வருடகாலத்தை மிகைத்துள்ள கூட்டுத் தொகை ரூபா 1,472,216 இற்கான 11 வகையான வைப்புக்களின் மீதியை சரியாக இனங்கண்டு தீர்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) | 41/90 ஆம் இலக்க 1990 அக்தோபர் 10 திகதி பொது நிருவாக சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான 31 வாகனங்களின் எரிபொருளின் எரிதலை பரிசோதனை செய்திருக்கவில்லை. |

**2 நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

கணக்காய்விற்கு சமர்பிக்கபட்டிருந்த நிதிக் கூற்றுகளின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 24,438,894 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 18,224,786 தொகையாக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 6,214,108 இற்கான வளர்ச்சி ஒன்றினைக் காட்டியது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 வீதவரி

மீளாய்வாண்டு இறுதி அளவில் நிலுவை வீதவரி மீதி ரூபா 24,235,904 தொகையாக இருந்ததுடன், அப்பணத்தை அறவீடு செய்வதற்காக நகரசபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 170(2) இன் பிரகாரம் முறையான நிகழ்ச்சி திட்டமொன்று தயாரித்து செயற்படுத்துவது தொடர்பாக நகரசபை கவனம் செலுத்தியிருக்கவில்லை.

### 2.2.2 வாடகை

மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 4,646,770 தொகைக்கான நிலுவை வாடகையினை அறவீடு செய்வதற்காக நகரசபை கட்டளைச் சட்டத்தின் 170(அ)(1) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.3 அனுமதிப்பத்திர கட்டணம்

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிலுவை அனுமதி பத்திர கட்டணம் ரூபா 540,074 தொகையாக இருந்தது. நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக நகரசபை கட்டளைச் சட்டத்தின் 170(அ) (1) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முத்திரைக் கட்டணமாக ரூபா 33,022,548 தொகை மற்றும் நீதிமன்ற தண்டப்பணமாக ரூபா 1,600,000 தொகை கிடைக்க வேண்டியிருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

**(அ) பதவியணிக் கடன்**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஒய்வு பெற்றுள்ள மற்றும் செவையை விட்டுச் சென்றுள்ள இரண்டு உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 51,300 தொகை 2008 ஆண்டு முதல் அறவிடப்படாமல் முன்கொண்டு வரப்பட்டு காணப்பட்டது.

**(ஆ) மனித வள முகாமைத்துவம்**

(i) பதவியணி பிரிவின் சமூக அபிவிருத்தி உத்தியோக்த்தர் பதவி மற்றும் 06 முன் பள்ளி ஆசிரியர் பதவிகளுக்காக அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளாமல் உத்தியோகத்தர்கள் சேர்கப்பட்டிருந்ததுடன், இரண்டாம் தர பிரிவில் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி ஒன்றில் மற்றும் ஆரம்ப தர பிரிவில் 06 பதவிகளில் மிகைகள் காணப்பட்டன.

(ii) ஹிக்கடுவ ஆயுர்வேத நிலையத்திற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த மருந்து கலவையாளர் பதவிக்காக ஊழியர் ஒருவர் சேர்ப்பதற்காக 2002 ஆண்டு முதல் சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iii) சபையின் 04 முகாமைத்துவ உதவியாளர் பதவிகளில் கடமை மே வகை செய்வதற்காக அலுவலக உதவியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(iv) வருமான பரிசோதகர் ஒருவரின் தனிப்பட்ட கோவை நகர சபையில் காணப்படாததுடன், முறையான இடமாற்ற முறைமை ஒன்று காணப்படாமையால் முகாமைத்துவ உதவியாளர் ஒருவர் 13 வருடங்கள் மற்றும் வருமான பரிசோதகர் ஒருவர் 09 வருடங்களும் இடையறாது சபையில் கடமையாற்றியிருந்தனர்.

(இ) அங்கீகாரமின்றி சேர்கப்பட்டிருந்த ஊழியர்களின் சம்பளம் மற்றும் படிகள் செலுத்துவதற்காக சபையின் வருமானத்தில் ரூபா 2,718,047 தொகை செலவு செய்வதற்கு நேரிட்டிருந்தது.

(ஈ) சபையினால் பயன்படுத்தப்படும் 14 வாகனங்களின் உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.2 ஒப்பந்த நிருவாகம்

வலமுள்ள தகனசாலை II ஆம் கட்டத்திற்காக ரூபா 12,938,594 இற்கான தொகையொன்று மாவட்ட செயலாளரினால் தென்மாகாண சபை பிரதான செயலாளருக்கு ஒப்படைக்கபட்டிருந்த போதிலும் 2017 ஆகஸ்ட் 23 திகதி வரை II ஆம் கட்டத்தின் வேலைகள் ஆரம்பிக்கபட்டிருக்காததுடன் இது தொடர்பாக சபை கவனம் செலுத்தி தகனசாலையின் வேலையை பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.3 விளைவற்ற / குறைவாக பயன்படுத்தபடும் சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 04 சக்கர டிரக்டர்கள் 03,டேலர்கள்02 மற்றும் பகோ லோடர் வண்டி ஒன்றும் 2015 ஜூலை 10 ஆம் திகதி 02/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2015 ஆண்டின் போது மானியமாக கிடைத்திருந்த ரூபா 7,967,144 தொகை பெறுமதியான போடோன் அதிர்வு பாதை தகர்க்கும் இயந்திரம் மற்றும் 2016 ஆண்டின் போது தேசத்தை கட்டியெழுப்பும் அமைச்சில் இருந்து பெற்றிருந்த ரூபா 3,000,000 தொகை பெறுமதியான சாக்கடை பவுஸர் எதுவித தேவைக்கும் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.

## 4 நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் அடங்கியுள்ள செலவு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 26,112,414 தொகைக்கான சேமிப்புகளும், மேலும் 02 செலவு விடயங்களில் ரூபா 1,512,744 தொகைகான பிரதிகூலமான முரண்களும், 06 வருமான விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 16,278,476 தொகைக்கான நெருங்கி இருக்காத இலக்கு வருமானமும் காணப்படாமையால் பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவ கட்டுபாடு கருவி ஒன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 134 மற்றும் 134 இன் ஏற்பாடுகள் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர் (தென் மாகாண) இன் 2014 பெப்ரவரி 24 ஆம் திகதி தபபா/யஹ/01/ந.ச.லே சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. சபையினால் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் என அபிவிருத்தி உத்தியோகத்தரொருவர் நியமனம் செய்யப்பட்டிருந்தார்.

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுச் செயற்படுத்துதல்**

2009 ஜூன் 09 ஆந் திகதி DMA/2009 (i) இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவுவதற்காக மீளாய்வாண்டு இறுதிவரையும் சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**4.4 தீர்க்கபடாத மற்றும் பதில் அளிக்கபடாத கணக்காய்வு ஐய வினாக்கள்**

கடந்த ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் 2.2.6(அ)(i),(ii),(iii), 2.2.6(இ), 4.3(ஈ), 5.4(ii), 5.7 வரை சுட்டிக்காட்டிய குறைபாடுகளை சரி செய்வதற்காக இனங்கியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போதும் குறிப்பிட்ட சரி செய்தல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

**5 முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது கணக்காய்வு ஐயவினாக்கள் மூலம் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. கீழே விவரிக்கப்பட்டுள்ள முறைமைகள் மற்றும் கட்டுபாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமைகள் | முறைமையில் முக்கிய குறைபாடுகள் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) நிதிக்கூற்றுக்களுடன் அட்டவணைகள் சமர்பித்திருக்கவில்லை.<br>(ii) மாற்றமின்றி முன்கொண்டுவரப்படும் கணக்கு மீதிகளை தீர்த்திருக்கவில்லை.<br>(iii) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த நிலையான சொத்துக்கள் ஆவணப்படுத்தியிருக்கவில்லை. |
| (ஆ) வாகன நிருவாகம் | (i) சபைக்குச் சொந்தமான வாகனங்களின் எரிபொருள் எரிதல் பரிசோதனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.<br>(ii) சபைக்குச் சொந்தமான 31 வாகனங்களில் 13 வாகனங்கள் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டன.<br>(iii) விளைவற்ற வாகனங்களை பழுதுபார்ப்பதற்கு அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.<br>(iv) எதுவித ஓட்டத் தேவைக்கும் பயன்படுத்தப்படாமல் காணப்படும் 2 வாகனங்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (இ) பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) 07 செலவு விடயங்களில் சேமிப்பு காணப்பட்டன.<br>(ii) 06 வருமான விடயங்களில் பிரதிகூலமான முரண்கள் காணப்பட்டன. |
| (ஈ) பதிவேடுகள் பேணல் | (i) நட்டங்கள் சேதங்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.<br>(ii) நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரை ஆக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | | (iii) | மூலதன உதவிக்காக பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| | | (iv) | வைப்புக்கள் பதிவேடு நாளதுவரை ஆக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | மனித வள முகாமைத்துவம் | (i) | பதவியணி வெற்றிடங்களை நிரப்புவதற்கு அதேபோல் மிகைப் பதவியணியை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | | (ii) | சபையில் கடமையாற்றிய உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஊ) | வருமானம் சேகரித்தல் | (i) | நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்காக முறையான நடைமுறையொன்று செயற்படுத்தியிருக்கவில்லை. |
| | | (ii) | முத்திரைக் கட்டண வருமானம் இற்றைவரை அறவீடு செய்திருக்கவில்லை. |
| | | (iii) | பல வருடங்கள் முதல் காணப்படும் ஒரே முறையில் செலுத்தும் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |